## இரத்தினக்கல் மற்றும் ஆபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் - 2016

---

இரத்தினக்கல் மற்றும் ஆபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1993 இன் 50 ஆம் இலக்க தேசிய இரத்தினக்கல் ஆபரண அதிகாரச சபைச் சட்டத்தின் 32(3) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் விளைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக் கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் நிதிக்கூற்றுக்களில் ஏற்படுத்தும் தாக்கங்களைத் தவிர, நிதிக்கூற்றுக்களானவை இரத்தினக்கல் மற்றும் ஆபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

#### (அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01

நியமத்தின் 119 ஆம் பிரிவின் பிரகாரம் ரூபா 21,522,300 தொகைக்கான முன்னைய ஆண்டுகளுக்கான சீராக்கல்கள் உரிமை மூலதனத்தின் மாற்றங்கள் கூற்றில் முன்னைய ஆண்டில் இருந்து முன்கொண்டு வரப்பட்ட மீதிக்கு சீராக்கல் மேற்கொள்ளப்பட்டு காட்டுவதற்கு பதிலாக மீளாய்வாண்டின் நிதிச் செயலாற்றுகை கூற்றில் நிதி விளைவுகளுடன் சீராக்கல் மேற்கொள்ளப்பட்டுக் காட்டப்பட்டிருந்தது.

#### (ஆ) இலங்கைப் பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 02

(i) காசுப்பாய்ச்சல் கூற்றில் உட்படுத்தக் கூடாத பெறுமதியாகிய ரூபா 16,743,500 தொகைக்கான திறைசேரி மானியம் என கிடைத்திருந்த 02 வாகனங்களை முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் காசு வெளிப்பாய்தல் ஒன்று என மற்றும் நிதிச்செயற்பாடுகளின் கீழ் காசு உள்பாய்ச்சல் ஒன்றென காட்டப்பட்டிருந்தது.

(ii) நியமத்தின் 56 ஆம் பிரிவின் பிரகாரம் காசு மற்றும் காசுக்கு சமமானவைகளின் ஆக்கக்கூறுகளை வெளிப்படுத்தியிருக்கவில்லை.

**(இ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07**

(i) நடைமுறை அல்லாத சொத்துக்களின் ஆக்கபூர்வமான வாழ்க்கைக் காலத்தை வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையால் ரூபா 32,290,620 கிரயத்திற்கான சொத்துக்களை முற்றாக பெறுமானத்தேய்வு கழிக்கப்பட்டிருந்த போதிலும் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டுக் காணப்பட்டது. அதன் பிரகாரம் மதிப்பீட்டு வழுவினை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் மாற்றியமைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) நியமத்தின் 86 பிரிவின் பிரகாரம் ஆராய்ச்சி உபகரணங்களின் பெறுமானத்தேய்வு விகிதாசாரத்தை வெளிப்படுத்தியிருக்கவில்லை.

(iii) 15 இரத்தினக்கல் வெட்டும் இயந்திரங்களை திருத்துவதற்காக செலவிடப்பட்ட ரூபா 1,093,562 தொகை நியமத்தின் 22 ஆம் பிரிவின் பிரகாரம் மூலதனப்படுத்துவதற்கு பதிலாக செலவுகள் என பதிவழிக்கப்பட்டிருந்தது.

### 2.2.2 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆண்டிற்கான பணிக்கொடை ஏற்பாடு ரூபா 1,153,290 மற்றும் பணிக்கொடை கொடுப்பனவுகள் ரூபா 255,044 தொகை என்பன காசுப்பாய்ச்சல் கூற்றிற்கு சீராக்கல் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) முன்னைய ஆண்டுகளின் போது ஊழியர்களுக்கு மிகையாகச் செலுத்தியிருந்த ரூபா 2,151,320 தொகையில் இருந்து மீளாய்வாண்டின் போது சம்பளத்தில் இருந்து மீண்டும் அறவிடப்பட்ட ரூபா 95,893 தொகை முன்னைய ஆண்டின் திரண்ட நட்டத்துடன் சீராக்கல் செய்வதற்குப் பதிலாக செலுத்த வேண்டிய மீதி ஒன்றாக காட்டப்பட்டிருந்தது. இங்கு மிகையாக செலுத்திய தொகையை ஒரே தடவையில் அறவீடு செய்வதற்கு பதிலாக ஊழியர்கள் ஓய்வு பெறும் வரை சமமான மாதாந்த தவணைகளாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டிற்கான நிலையான சொத்துக்களின் பெறுமானத்தேய்வு ரூபா 322,174 தொகையினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) காணாமல் போயிருந்த ரூபா 1,495,749 தொகை பெறுமதியான தங்கம் வெள்ளி இருப்பு தொடர்ந்தும் இறுதி இருப்பில் உட்படுத்தப்பட்டிருந்தது.

### 2.2.3 விளக்கமளிக்கப்படாத வித்தியாசங்கள்

இரத்தினக்கல் வடிவமைத்தல் மற்றும் தொழிநுட்பவியலாளர்களை பயிற்றுவிப்பு செயற்திட்டத்தின் செயற்பாட்டு செலவுகளில் தேசிய இரத்தினக்கல் ஆபரண அதிகார சபையில் இருந்து மீளளிப்புச் செய்யப்பட வேண்டிய தொகை ரூபா 1,086,831 தொகையெனினும், அதனை ரூபா 1,298,143 தொகையென ரூபா 211,312 தொகை மிகையாக பெற வேண்டிய வருமானம் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் தேசிய இரத்தினக்கல் ஆபரண அதிகார சபையின் நிதி அறிக்கைகளின் பிரகாரம் நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய மீதிகள் ஏதும் காணப்படவில்லை.

**2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 ஆண்டின் போது சேவையை விட்டு விளகிய ஊழியர்களிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 72,586 இற்கான கடன் மீதிகள் மீளாய்வாண்டு வரையும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பாடநெறிகளை பூர்த்தி செய்திருந்த 32 மாணவர்களிடம் பெற்றிருந்த ரூபா 64,000 இற்கான திருப்பி செலுத்த வேண்டிய வைப்புக்கள் 3 வருடங்களை கடந்திருந்த போதிலும் திருப்பி செலுத்தியிருக்கவில்லை.

**2.4 சட்டங்கள்விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

பின்வரும் சட்டங்கள்விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள்விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 770 | ரூபா 88,870 தொகை பெறுமதியான பழுதடைந்த 03 கையடக்கத் தொலைபேசிகள் தொடர்பாக நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் செயற்படாமல் நுகர்வுப் பொருள்கள் இருப்பில் உட்படுத்தப்பட்டிருந்தது. |
| (ஆ) | 1978 இன் 842 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை | நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

**2.5 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்**

2 மத்திய நிலையங்களில் நடத்தப்பட்டு வந்த இரத்தினக்கல் வெட்டுதல் மற்றும் மெருகூட்டல் மற்றும் ஆபரண உற்பத்தி ஆகிய பாடநெறிக்காக சேர்க்கப்பட்டிருந்த 38 மாணவர்களில் 09 மாணவர்களிடம் ரூபா 136,500 இற்கான பாடநெறிக் கட்டணம் அறவிடப்படாமல் இருந்ததுடன் அதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெற்றிருக்கவில்லை.

**3. நிதி மீளாய்வு**

**3.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது நிறுவகத்தின் நிதிவிளைவுகள் ரூபா 6,587,800 இற்கான மிகையொன்று காணப்பட்டதுடன் அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 7,481,616 தொகை காணப்பட்டமையினால் முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 14,069,416 இற்கான வளர்ச்சி ஒன்றினைக் காட்டியது. மீண்டுவரும் செலவுகளுக்காக திறைசேரி மானியம் ரூபா 11,546,000 இனால் அதிகரித்தல் மற்றும் பெறுமானத்தேய்வு ரூபா 5,461,966 இனால் குறைவடைதல் மேற்கூறிய வளர்ச்சியினை முக்கியமாக பாதித்திருந்தது.

மீளாய்வாண்டு மற்றும் கடந்த 04 வருடங்களின் நிதி விளைவுகள் பகுப்பாய்வு செய்யும் போது 2014 மற்றும் மீளாய்வாண்டின் போது மிகையொன்றினை பெற்றிருந்த போதிலும் 2012, 2013 மற்றும் 2015 ஆண்டுகளின் போது பற்றாக்குறைகள் அவதானிக்கப்பட்டன. எவ்வாறாயினும் நிதி விளைவுகளுக்கு ஊழியர் வேதனம் மற்றும் நடைமுறை அல்லாத சொத்துக்களுக்காக பெறுமானத்தேய்வு மீண்டும் சீராக்கல் மேற்கொண்ட போது, 2012 ஆண்டின் போது ரூபா 28,286,500 தொகையாக காணப்பட்ட நிறுவகத்தின் பங்களிப்பு 2013 ஆண்டின் போது சிறு அளவில் வீழ்ச்சியடைந்திருந்த போதிலும் ஏனைய ஆண்டுகளின் போது கிரமமாக வளர்ச்சியடைந்திருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் போது ரூபா 62,443,300 தொகைக்கான நிறுவகத்தின் பங்களிப்பு முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது ரூபா 62,443,300 இனால் எனப்படும் 26 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றுகை

இரத்தினக்கல் கனிப்பொருள் தொடர்பாக கணிப்பீடு மற்றும் பரிசோதனை மேற்கொள்ளல் இரத்தினக்கல் ஆபரண தொழிலுக்கு தேவையான இயந்திர உபகரணங்களை உற்பத்தி செய்தல் உட்பட ஆலோசனை வழங்கல் மற்றும் அபிவிருத்தி செய்தல், இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் தொழில் துறைகள் தொடர்பாக பயிற்சி வழங்கள் மற்றும் குறிப்பிட்ட விடயங்களை மற்றும் மேற்கொள்ளப்பட்ட வேலைகள் தொடர்பாக பிரசுரங்கள் மற்றும் புத்தகங்கள் வெளியிடல் 1993 இன் 50 ஆம் இலக்க தேசிய இரத்தினக்கல் ஆபரணங்கள் அதிகார சபை சட்டத்தின் பிரகாரம் நிறுவகம் நிறுவப்பட்ட முக்கிய குறிக்கோளாகும்.

மேற்கூறிய குறிக்கோள்களை மேற்கொள்ளல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவகம் நிறுவப்பட்டு 20 வருடங்கள் மிகைத்திருந்த போதிலும் மேற்கூறிய நோக்கங்களை நிறைவேற்றுவது தொடர்பாக சுருசுருப்புடன் பங்களித்திருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. இரத்தினக்கல் கனிப்பொருள் தொடர்பாக கணிப்பீடுகள் மற்றும் ஆய்வுகள் மேற்கொள்வதன் மூலம் இனங்காணப்பட்ட இரத்தினக்கல் படிவுகள் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு திரட்டிக் கொடுத்தல், தொழிலின் அபிவிருத்திக்காக இயந்திர உபகரணங்கள் உற்பத்தி செய்தல் உட்பட ஆலோசனைகள் வழங்கள் மற்றும் பெறுமதியினைச் சேர்க்கும் நடைமுறைகள் மற்றும் கண்டுபிடிப்புக்களை அறிமுகப்படுத்தி தொழிலினை அபிவிருத்தி செய்வதற்காக நிறுவகத்தின் பங்களிப்பு குறைந்த நிலையிலேயே காணப்பட்டது. இரத்தினக்கல் ஆபரண தொலிழின் அபிவிருத்திக்காக இயந்திர உபகரணங்கள் உற்பத்தி செய்தல் உட்பட ஆலோசனைகள் வழங்கள் மற்றும் நிறைவேற்றப்பட்ட வேலைகள் தொடர்பாக பிரசுரங்கள் மற்றும் புத்தகங்கள் வெளியிடல் ஆகிய விடயங்கள் நிறைவேற்றப்பட்டு அல்லது அவற்றிற்காக திட்டங்கள் தயாரிக்கப்பட்டோ இருக்கவில்லை.

#### (ஆ) ஆராய்ச்சி விடயங்கள் நிறைவேற்றல்

ஆராய்ச்சி விடயங்களின் செயலாற்றுகை தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இரத்தினக்கல் படிவுகளை கண்டுபிடிப்பதற்கான ஒட்டுமொத்த செயலாற்றுகை 35 சதவீதமாகும். அதன் கீழான 6 செயற்பாடுகளின் பௌதீக செயலாற்றுகை 75 சதவீதம் முதல் 90 சதவீதம் இடையிலான வீச்சில் காணப்பட்ட போதிலும் நிதி செயலாற்றுகை 18 சதவீதத்தை விட குறைவான நிலையில் காணப்பட்டது.

(ii) குறைந்த பெறுமதியுடைய இரத்தினக்கற்களின் பெறுமதியின் கூட்டும் விடயத்தில் ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை 1 சதவீதமான குறைவான மட்டத்தில் காணப்பட்டதுடன் அதன் கீழ் காணப்படும் இரத்தினக்கல் வெப்பமூட்டித் திருத்தும் மற்றும் மேலதிக அபிவிருத்தி உட்பட 5 செயற்பாடுகளின் பௌதீக செயலாற்றுகை 20 சதவீதம் முதல் 80 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்ட போது நிதி செயலாற்றுகை 5 சதவீதத்தை விட குறைவான மட்டத்தில் காணப்பட்டது.

(iii) புவியியல் தகவல்கள் தொழிலநுட்ப மற்றும் தொலை தொடர்பாடல் தொழிநுட்ப கல்வி விடயத்தின் கீழ் மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த மொனராகலை மாவட்டத்தில் கதிர்காமம், தனமல்வில மற்றும் பிபில ஆகிய பிரிவுகளில் வரைபடங்கள் வடிவமைத்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iv) மெதகம பிரதேச செயலகப் பிரிவில் 35 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் தொடர்பாக இரத்தினக்கல் மறைந்துள்ள வரைபடங்கள் தயாரிக்கப்பட வேண்டுமெனினும் 10 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் தொடர்பாக மறைந்துள்ள வரைபடங்கள் மாத்திரமே தயாரிக்கப்பட்டிருந்தன.

**(இ) பயிற்சி பாடநெறிகள் நடாத்துதல்**

பயிற்சி பாடநெறிகள் நடத்துதல் தொடர்பான செயலாற்றுகை தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) பயிற்சி பாடநெறிகளுக்காக கல்வின் நாட்காட்டி மற்றும் முறையான திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மீளாய்வாண்டின் போது 6 பாடநெறிகளில் 375 மாணவர்களுக்கு இலவசமாக பயிற்சி வழங்குவதற்கு திட்டமிட்டிருந்த போதிலும் 242 மாணவர்களுக்கு மாத்திரம் பயிற்சி வழங்கப்பட்டிருந்தது.

(iii) கெவுட வெப்ப மூட்டுதல் தொடர்பாக 5 பாடநெறிகள் நடத்துவதற்கு திட்டமிட்டிருந்த போதிலும் 3 பாடநெறிகள் நடத்தப்பட்டிருந்தன.

(iv) ஆண்டின் போது பாடநெறிகளுக்காக சேர்க்கப்பட்டிருந்த மொத்த மாணவர்கள் எண்ணிக்கை 757 இல் 117 பேர் அதாவது 15 சதவீதம் பாடநெறிகளை விட்டுச் சென்றிருந்ததுடன் 13 மாணவர்களுக்காக ஆரம்பிக்கப்பட்டிருந்த அலங்கார ஆபரண உற்பத்தி பாடநெறி நிறுத்தப்பட்டிருந்தது.

(v) மீளாய்வாண்டின் போது பாடநெறி வருமானம் 47 சதவீதத்தினால் அதிகரித்திருந்த போதிலும் செலவுகளும் 159 சதவீதத்தினால் அதிகரித்த காரணத்தினால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக பாடநெறிகளின் மூலம் இலாபம் ரூபா 856,214 இனால் அதாவது 22 சதவீதத்தினால் குறைந்திருந்தது.

(vi) மூன்று வருடங்களில் இரத்தினக்கல் வடிவமைப்பாளர் 1000 பேருக்கு பயிற்சி வழங்குவதற்காக திட்டமிட்டு அவிசாவளை பகுதியில் வாடகைக்கு எடுத்த வீட்டிற்காக ஆண்டின் 6 மாதங்களுக்காக ரூபா 300,000 வாடகை செலுத்தியிருந்த போதிலும் பாடநெறிகளில் பங்குபற்றிய மாணவர்களின் எண்ணிக்கை 25 மாத்திரமே.

(ஈ) மீளாய்வாண்டின் போது பயிற்சி பாடநெறிகளுக்காக மற்றும் இரத்தினக்கல் மற்றும் ஆபரண தொழிலுடன் தொடர்புடைய ஆராய்ச்சி விடயங்களின் அபிவிருத்திக்காக திறைசேரியால் வழங்கப்பட்டிருந்த ரூபா 35,000,000 இற்கான மூலதன நிதி ஏற்பாடுகளில் இருந்து ரூபா 16,500,000 தொகை சேமிக்கப்பட்டு அப்பணத்தில் இருந்து ரூபா 13,850,105 தொகை செலவிடப்பட்டு பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் மீது மாத்திரம் காணி ஒன்று கொள்வனவு செய்திருந்தது. இந்த கொள்வனவு மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உட்படுத்தியிருக்காததுடன் திறைசேரியில் இருந்து கிடைத்த நிதியத்தை வேறு விடயங்களுக்காக ஈடுபடுத்துவதற்காக திறைசேரியின் அங்கீகாரத்தைப் பெற்றிருக்கவில்லை.

(உ) கட்டணம் அறவீடு செய்து கெவுட வெப்பமூட்டும் பொது மக்கள் சேவை ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் அச் சேவையில் இருந்து கிடைத்திருந்த வருமானம் ரூபா 50,300 தொகையாகக் காணப்பட்டமையால் அது தொடர்பாக செயலாற்றுகை பலவீன நிலையில் காணப்பட்டது.

## 4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னால் சிரேஷ்ட முகாமையாளர் ஒருவரினால் 2007 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட ரூபா 2,395,749 இற்கான தங்கம் வெள்ளி மோசடி தொடர்பாக மேலும் அறவிடப்பட வேண்டிய ரூபா 1,495,745 தொகை மற்றும் அவ் உத்தியோகத்தருக்கு செலுத்தியிருந்த மோட்டார் வாகனக் கடன் ரூபா 56,250 தொகையும் அதற்கான வட்டியினையும் அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) பயிற்சி வழங்கல் பாடநெறிகளில் பயன்படுத்தப்பட்ட இரத்தினக்கல் இருப்பு ஒன்று பெறுமதி மதிப்பீடு செய்யப்படாமல் கிரயப் பெறுமதி ரூபா 399,006 இற்கான நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

## 4.3 செயற்பாட்டு தொழிற்பாடுகள்

இரத்தினக்கல் வடிவமைப்பாளர்கள் பயிற்றுவிப்பதற்கான கட்டிடங்கள் வாடகைக்கு எடுப்பதற்காக விலைகூறல்கள் அழைப்பிற்கான செய்தித்தாள் அறிவத்தலுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 141,081 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், பின்னர் பெறுகைகள் இரத்துச் செய்யப்பட்டமையால் செலவிடப்பட்டிருந்த பணம் பயனற்ற செலவு ஒன்றாகியுள்ளது. மேலும் நிறுவன செயற்பாடு முறைமை கைநூல் ஒன்று தயாரிப்பதற்கு முற்பணமாக ரூபா 317,000 செலுத்தப்பட்டிருந்த போதிலும் அவை தேவையில்லை என பணிப்பாளர் சபை தீர்மானித்திந்த காரணத்தினால் அந்த செலவு பயனற்ற செலவு ஒன்றாக மாறியுள்ளது.

## 4.4 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கெவுட வெப்பமுட்டி திருத்துவதற்காக ஆராய்ச்சி விடயங்களுக்காக ரூபா 10,977,344 தொகை செலவிடப்பட்டு 2013 ஆண்டின் போது கொள்வனவு செய்திருந்தது. அதிவெப்ப மின்சார சூட்டடுப்பு 2017 ஜூலை 15 திகதி வரை உரிய வேலைக்காக பயன்படுத்தியிருக்கவில்லை.

(ஆ) பயன்பாடு தொடர்பான திட்டம் ஒன்று இன்றி 2007 ஆண்டின் போது ரூபா 12,309,013 செலவிடப்பட்டு நிலம் துளைக்கும் இயந்திரம் ஒன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. 2017 ஜூலை 15 திகதி வரை அவ்வியந்திரத்தை ஆக்கபூர்வமாகப் பயன்படுத்தியிருக்காத போதிலும் இயந்திரத்தை காப்புறுதி செய்வதற்காக மீளாய்வாண்டு வரை ரூபா 1,064,622 தொகை செலவிடப்பட்டிருந்தது.

## 4.5 பெறுகைகள் செய்முறை

### (அ) ஆராய்ச்சி துறைக்கு உபகரணங்கள் கொள்வனவு செய்தல்

(i) பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் 5.3.2 ஆம் பிரிவின் பிரகாரம் விலைகூறல் கோரளுக்கான அழைப்புடனான செய்தித்தாள் அறிவித்தலில் விலைகூறுபவர் நேரடியாகத் தகைமையுடையவர் என உறுதிப்படுத்தும் உவமானம் உள்ளடக்கப்பட்டு தயாரித்திருக்காததுடன் அலுவலக உபகரணங்கள் மற்றும் கணனி உபகரணங்கள் உள்ளடங்கிய கூறுவிலைகோரல், ஆராய்ச்சி உபகரணங்கள் என குறிப்பிடப்பட்டிருந்த காரணத்தினால் போட்டித்தன்மை வரையறுக்கப்பட்டிருந்தது.

(ii) ஆராய்ச்சி உபகரணங்கள் கொள்வனவு செய்தல் என அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டிருந்த போதிலும் புகைப்பட உபகரணங்கள், அலுவலக உபகரணங்கள் மற்றும் கணனிகள் மற்றும் துணைக் கருவிகள் உட்பட 56 விடயங்களுக்காக விலைகூறல் அழைக்கப்பட்டிருந்தது.

(iii) பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் 7.12.1 ஆம் பிரிவின் பிரகாரம் கிடைத்திருந்த விலைகூறல்களின் பிரகாரம் ஆக்கபூர்வமாகக் காணப்படாதவிடத்து கிடைத்துள்ள விலைகூறல்களை இரத்துச் செய்து மீண்டும் கூறுவிலை கோரப்பட முடியும் எனினும், அதன் பிரகாரம் செயற்படாமல் விலைகூறல் ஒன்று மாத்திரம் சமர்ப்பித்திருந்த 7 வகையான பண்டங்கள் ரூபா 2,263,080 தொகைக்கு அதே விலைகூறல் சமர்ப்பித்தவரிடமே கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

(iv) கட்டளை சமர்ப்பிக்கும் போது இனங்கியிருந்த நியமக் குறிப்பீடுகளை பூர்த்தி செய்திருக்காத 2 பண்டங்களை ரூபா 408,537 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

### (இ) இரத்தினக்கல் வடிவமைப்பாளர்கள் பயிற்றுவிப்பதற்காக கட்டிடம் வாடகைக்கு எடுத்தல்

(i) கட்டிடம் வாடகைக்கு எடுப்பதற்காக 3 இடங்களிலிருந்து விலைகூறல் அழைத்திருந்த போதிலும் பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் 4.3 ஆம் பிரிவின் பிரகாரம் முறையான கிரய மதிப்பீடு ஒன்று தயாரிக்கப்பட்டிருக்காததுடன் கட்டிடங்கள் வாடகைக்கு எடுக்க வேண்டிய இடங்கள் தெளிவான அடிப்படை ஒன்றின் மீது தீர்மானிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் 6.2.2 ஆம் பிரிவின் பிரகாரம் தேசிய போட்டி அடிப்படை விலைகோரல் அழைக்கும் போது விலைகோரல் சமர்ப்பிப்பதற்காக 21 நாட்கள் கால அவகாசம் வழங்க வேண்டுமெனினும் இந்த பெறுகைகள் தொடர்பாக 13 நாட்கள் மாத்திரமே வழங்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக 02 இடங்கள் தொடர்பான 3 கூறுவிலைகள் மாத்திரம் கிடைத்திருந்தன.

(iii) பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் 7.12.1 ஆம் பிரிவின் பிரகாரம் போட்டி ஒன்று காணப்படாத சந்தர்ப்பங்களில் விலைகோரலை இரத்துச்செய்து மீண்டும் கூறுவிலை அழைக்கப்பட வேண்டுமெனினும் அவிசாவளை பகுதியில் கட்டிடம் ஒன்று தொடர்பாக கிடைத்திருந்த ஒரே ஒரு கூறுவிலை தெரிவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் தெரிவு செய்யப்பட்டிருந்த அக் கட்டிடத்தின் 1000 சதுர அடி கொண்ட மண்டபம் ஒன்று காணப்பட வேண்டுமெனவும் மூன்று அவத்தை மின்சார தொடர்பு காணப்பட வேண்டும் என்ற நியமக்குறியீடுகள் நிறைவேற்றியிருக்கவில்லை.

## 4.6 பதவியணியின் நிருவாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிறுவகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினால் 57 சதவீதம் வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் சிரேஷ்ட முகாமைத்துவ நிலைகளுக்காக அங்கீகரிக்கப்பட்டிருந்த 3 பதவிகளில் 2 பதவிகள் 7 வருட காலமாக வெற்றிடமாகக் காணப்பட்டது. மேலும், பணிப்பாளர் (ஆராய்ச்சி) பதவியினை நிரப்புவதற்காக கணக்காய்வுத் திகதியாகிய 2017 ஜுலை 15 வரையும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம் பதவிக்காக 2016 ஜனவரி 01 திகதி முதல் ஒப்பந்த அடிப்படையில் உத்தியோகத்தர் ஒருவர் சேர்க்கப்பட்டிருந்தார்.

(இ) நிறுவகத்தின் சாரதி ஒருவர் முறையான அங்கீகாரம் இன்றி 2015 ஆண்டு முதல் சமுத்திரவியல் பற்றிய பல்கலைக்கழகத்திற்கு விடுவிக்கப்பட்டிருந்தார்.

(ஈ) முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தில் அங்கீகாரமின்றி உரிய சம்பள அளவை விட கூடிய சம்பள அளவு மட்டத்தில் வைத்த காரணத்தினால் 2009 மே முதல் 2015 ஜுலை வரை அலுவலர் ஒருவருக்கு ரூபா 619,646 தொகையான சம்பளம் மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. அந்த உத்தியோகத்தர் 2015 ஜுன் 16 ஆம் திகதி வேறு நிறுவனமொன்றின் சேவைக்காக விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் அவ்வாறு மிகையான செலுத்தியிருந்த தொகையை கணக்காய்வுத் திகதியாகிய 2017 ஜுலை 17 திகதி வரை அறவீடு செய்திருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 5.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2003 ஜுன் 02 திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனினும் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 48 நாட்கள் தாமதித்து 2017 ஏப்ரல் 17 திகதி கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

## 5.2 கூட்டிணைந்த திட்டம்

2014-2018 காலப்பகுதிக்காக தயாரிக்கப்பட்டிருந்த கூட்டிணைந்த திட்டம் மீளாய்வாண்டின் போது நாளதுவரையாக்கியிருக்கவில்லை.

## 5.3 செயல்நடவடிக்கைத் திட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஒட்டுமொத்த நிறுவகத்திற்காக ஒரு செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்காததுடன் மனிதவளம் மற்றும் நிருவாகம், ஆராய்ச்சி மற்றும் பயிற்சி வழங்கும் துறைக்காக மாத்திரம் துறைசார் திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மனிதவளம் மற்றும் நிருவாகம் மற்றும் ஆராய்ச்சி துறைகளினால் செயல்நடவடிக்கைத் திட்டங்களில் பௌதீக இலக்குகள் காட்டப்பட்டிருக்கவில்லை.

(இ) பயிற்சி வழங்கம் துறையின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் உள்ளடங்கியிருக்காத இரண்டு பாடநெறிகளுக்காக 21 மாணவர்கள் மற்றும் 12 மாணவர்கள் சேர்க்கப்பட்டிருந்தனர்.

(ஈ) வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் இலக்குகளை பெற்றுக்கொண்ட முன்னேற்ற அளவினை பரிசோதனை செய்வதற்காக முறையான நிகழ்ச்சித் திட்டம் ஒன்று தயாரித்து அல்லது திட்டத்தின் பிரகாரம் செயலாற்றுகை அறிக்கைகள் தயாரித்திருக்கவில்லை.

## 5.4 உள்ளகக் கணக்காய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உள்ளகக் கணக்காய்வு விடயங்களுக்காக நிறுவகத்தின் தலைவருக்கு பொறுப்புச் சொல்ல வேண்டிய பெண் கணக்காய்வாளர் ஒருவர் நியமனம் செய்திருந்த போதிலும் உதவிக் கணக்காய்வு பதவியணியினர் ஒன்றினை அங்கீகரித்து அல்லது நியமனம் செய்திருக்காததுடன் உள்ளகக் கணக்காய்வாளரின் தொழில்சார் அறிவினை விருத்தி செய்வதற்காக பயிற்சி வழங்குதல் செயற்படுத்தியிருக்கவில்லை.

(ஆ) உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் திட்டமிட்டிருந்த 792 தொழில் மணித்தியாலங்கள் ஒதுக்கப்பட்ட 08 கணக்காய்வு விடயங்கள் தொடர்பாக கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும் நிதிப்பிரமாணங்கள் 133(2) இன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வுத் துறையினால் நிறுவகத்தின் கணக்கு அறிக்கைகள் அட்டவணைகள் பதிவுகளின் நம்பிக்கைத் தன்மையினை பரிசோதனை மேற்கொள்ள வேண்டுமெனினும் இது தொடர்பாக பரிசோதனைகள் உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டத்தில் உள்ளடக்கி கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 5.5 பெறுகைகள் திட்டம்

நிலையான சொத்துக்கள் உரித்தாக்குவதற்காக திறைசேரியில் இருந்து வழங்கியிருந்த ரூபா 31,950,000 தொகை தொடர்பாக முறையான பெறுகைகள் திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை.

## 5.6 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 ஜுன் 02 திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரிவு 5.2 இன் பிரகாரம் பாதீட்டுடன் நிதி நிலைமைக் கூற்று, பாதீட்டு வருமானம் மற்றும் செலவினக் கூற்று மற்றும் பாதீட்டு காசுப்பாய்ச்சல் கூற்று தயாரித்திருக்கவில்லை.

(ஆ) பாதீட்டு மற்றும் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகளிடையே 11 சதவீதம் முதல் 605 சதவீதம் வரையான வீச்சில் முரண்கள் அவதானிக்கப்பட்டமையினால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டு கருவி ஒன்றாகப் பயன்படுத்தியிருக்கவில்லை.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகத்தின் தலைவரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டு பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்பு | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | கணக்கீடு | வெவ்வேறாக பேரேட்டு கணக்குகள் பேணப்பட வேண்டிய 4 செலவினங்கள் ஒரு செலவினக் கணக்கில் மற்றும் 3 வட்டி வருமானக் கணக்குகள் ஒரு வருமானக் கணக்கில் காட்டப்பட்டிருந்தமை. |
| (ஆ) | பெறுகைகள் விடயங்கள் | பெறுகைகள் திட்டமொன்று தயாரித்து அதற்கிணங்க பெறுகைகள் மேற்கொள்ளப்படாமல் ஒவ்வொரு பண்ட வகைகளுக்கும் வெவ்வேறாக பெறுகைகள் மேற்கொள்ளப்படல். |
| (இ) | செயற்பாட்டுக் கட்டுப்பாடு | பாடநெறிகளுக்காக வழங்கப்படுகின்ற சான்றிதழ்கள் முறையான பொறுப்பின்றி பொறுப்பில் வைத்திருத்தல், அனைத்து சான்றிதழ்களையும் இயந்திரமொன்றின் மூலம் இலக்கம் பதிக்காமை மற்றும் பிழைகள் காரணமாக அகற்றும் சான்றிதழ்கள் உரிய முறைப்படி அகற்றப்படாமை. |